**செய்தி வெளியீடு எண்: 023** **நாள்: 05.01.2018**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (5.1.2018) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிகிச்சை சிறப்பு மருத்துவமனை கூட்ட அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில்,390 கிராம சுகாதார செவிலியர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி ஆற்றிய உரை**

ஏழைகளை ஏந்தி நிற்கும்
எங்கள் குல தெய்வம்
பார்க்கும் இடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும்
மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,
சிறப்புமிக்க இந்த நிகழ்ச்சியில் உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த நிகழ்ச்சிக்கு தலைமையேற்று சிறப்பான உரையாற்றிய
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு (ம) குடும்ப நலத்துறை அமைச்சர்
**டாக்டர் சி. விஜயபாஸ்கர்** அவர்களே !

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு இதய அறுவை சிகிச்சை செய்த அந்த மருத்துவர்களுக்கும் சிறப்புகள் செய்து, புதிய பணியானை வழங்குகின்ற நிகழ்ச்சியில் பங்குபெற்று இருக்கின்ற மாண்புமிகு துணைமுதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்புத்துக் கொண்டிருக்கின்ற
தலைமைச் செயலாளர் (பொறுப்பு)
திரு. **க. சண்முகம்** இ.ஆ.ப., அவர்களே !

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்புத்துக் கொண்டிருக்கின்ற
மக்கள் நல்வாழ்வு (ம) குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர்
டாக்டர் **ஜெ. ராதாகிருஷ்ணன்**, இ.ஆ.ப., அவர்களே !

தேசிய நலவாழ்வு குழும திட்ட இயக்குநர்
டாக்டர் **தாரேஸ் அகமது,** இ.ஆ.ப., அவர்களே !

மருத்துவப் பணியாளர் தேர்வு வாரிய தலைவர்
திரு **வே. ராஜாராமன்,** இ.ஆ.ப., அவர்களே !

பொது சுகாதாரம் மற்றம் நோய் தடுப்பு மருந்து இயக்குநர்
டாக்டர் **கே. குழந்தைசாமி** அவர்களே !

மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற
சுகாதார அலுவலர்களே ! பணியாளர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!
நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,
முன்னாள் அமைச்சர் பெருமக்களே,
முன்னாள் நாடாளுமன்ற , சட்டமன்ற உறுப்பினர்களே,

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையில் உள்ள துறைத் தலைவர்களே !
அலுவலர்களே !
பொது மக்களே!
புதிதாக பணியாணை பெறவிருக்கின்ற செவிலியர்களே!
பத்திரிக்கை மற்றும் ஊடக நண்பர்களே
உங்கள் அனைவருக்கும் முதற்கண்
எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு சுகாதாரத் துறையில் தன்னிறைவு பெற்று இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகவும்,
முன்மாதிரி மாநிலமாகவும் திகழ்கிறது.
அதற்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்கு பார்வையுடன் கூடிய
சுகாதார திட்டங்கள்தான் காரணம்.
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்
அடிதட்டு மக்கள் மற்றும் நடுத்தர மக்களின் சுகாதாரத்தில் அதிக அக்கறையும்,
ஈடுபாடும் கொண்டு சுகாதாரத்துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து
தமிழ்நாட்டில் அளிக்கப்படும் மருத்துவத்தை உலகத்தரத்திற்கு உயர்த்தினார்கள்.
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின்
வழியில்தான் அம்மாவினுடைய அரசும் சுகாதாரத்துறைக்கு
அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது.

ஒரு மாநிலத்தின் சுகாதாரத்துறைக்கென தனியாக மருத்துவப்பணிகள் தேர்வு வாரியம் அமைக்கப்பட்டது முதன்முதலில் தமிழ் நாட்டில்தான் என்பதிலும்,
இன்றைய தேதிவரை இந்தத் தேர்வு வாரியம் மூலம்

10,680 மருத்துவர்கள், 9,533 சிறப்பு மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் உட்பட 23,466 பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது தவிர, செவிலியர்கள்,
முதுநிலை பேராசியர்கள், ஆய்வக நுட்புநர்கள்,
சித்தா, ஆயுர்வேத, ஓமியோபதி, யுனானி மருந்தாளுநர்கள்,
நுண்கதிர் சிகிச்சை நுட்புநர்கள்,
யோகா மற்றும் இயற்கை வைத்திய
உதவி மருத்துவ அலுவலர்கள் என
சுமார் 2,900 பணியிடங்களை நிரப்ப
இவ்வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

குறிப்பாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மகளிர் சுகாதாரத்தில் அதிக அக்கறை எடுத்துக்கொண்டார்கள்.
**‘அம்மா குழந்தை நல பரிசுப்பெட்டகம்’**
**‘அம்மா மகப்பேறு சஞ்சீவி பெட்டகம்’**
**‘வளர் இளம் பெண்களுக்கு சானிடரி நாப்கின்’**
**‘முதலமைச்சரின் விரிவான**
**மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்’**
**‘அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டம்’**
ஆகிய தொலை நோக்குடன் கூடிய திட்டங்களை
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தி
செயல்படுத்தினார்கள்.
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் வழியில் செயல்படும் அம்மாவினுடைய
அரசும், ஏழை, எளிய மக்களுக்கான மருத்துவ சேவையை
மேலும் மேலும் விரிவு படுத்திவருகிறது.

தங்குதடையின்றி சுகாதாரச் சேவை பொதுமக்களுக்கு கிடைப்பதற்காக
சுகாதாரத்துறையில் போதுமான மருத்துவர்கள், செவிலியர்கள், பணியாளர்கள்
மருத்துவ பணிகள் தேர்வு வாரியத்தின்மூலம்
தேர்வு செய்யப்படுகிறார்கள். அதன் விளைவாகத்தான்
சமீப காலத்தில் தமிழ்நாட்டில் டெங்கு காய்ச்சல்
என்ற பேராபத்து வந்த போது சுகாதார அலுவலர்களும், பணியாளர்களும்,
பொதுமக்கள் ஒத்துழைப்போடு
அதனை ஒழிப்பதிலும், கட்டுப்படுத்துவதிலும்

முழுமுனைப்போடு செயல்பட்டார்கள். அது மட்டுமல்லாமல் எதிர்காலத்தில் இப்படிப்பட்ட விஷகாய்ச்சல் ஏற்படாதவாறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்தார்கள்.

மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில்
தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருகிறது.
இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான்
அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில்
அதிக அளவிலான உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் நடைபெறுகின்றன
என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை மேற்கொள்வதில் மிகச் சிறப்பாக செயல்பட்டதற்காக, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில்
நாட்டிலேயே முதல் மாநிலத்திற்கான
தேசிய விருதுகளை தமிழ்நாடு வென்றுள்ளது.

இங்கிலாந்திலிருந்து வெளியாகும்
'British Medical Journal' என்ற பத்திரிகை தமிழ்நாட்டின் உடல் உறுப்பு தான செயல்பாடுகள்
பிற நாடுகளும் பின்பற்றத்தக்கதாக உள்ளது
என புகழாரம் சூட்டியுள்ளது. இவையெல்லாம் நம் தமிழ்நாட்டிற்குப் பெருமை.

அதைபோல தமிழ்நாட்டில் தடுப்பூசித் திட்டம்
சிறப்பாக செயல்பட்டு வருவதால் போலியோ, கக்குவான் இருமல், தொண்டை அடைப்பான் மற்றும் இரண ஜன்னி போன்ற நோய்கள் இல்லாத ஒரு நிலையை தமிழ்நாடு பெற்றுள்ளது.

குறிப்பாக நமது துணை சுகாதார நிலைய அளவிலான
மருத்துவ சேவைகள் மற்ற மாநிலங்களுக்கு
எடுத்துக்காட்டாக விளங்குகிறது.
தமிழ்நாடு அரசின் மருத்துவ சேவைகளை மாநிலத்தின் ஊரகப்பகுதிகளுக்கும், மூலைமுடுக்குகளுக்கெல்லாம் கொண்டு சென்று செயல்படுத்துவதில் கிராம சுகாதார செவிலியர்களின் பணி மிகமிக அவசியமானது ஆகும். இதைக் கருத்தில் கொண்டுதான் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியால் நடைபெறும் அம்மாவினுடைய அரசு அதிகமான செவிலியர்களை பணிநியமனம் செய்து வருகிறது. அதன் ஒரு பகுதியாகத்தான்
இன்று **390 பேர் பயிற்சி முடித்து கிராம சுகாதார செவிலியர்**களாக பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், சென்னை பெருநகர மாநகராட்சியில்
15 மருத்துவக்குழுக்கள் ஏற்படுத்தும் விதமாக
15 வாகனங்களின் சேவையை கொடி அசைத்து இன்று துவக்கி வைத்துள்ளேன்.
நோயாளிகள் மருத்துவமனைக்கு வரும்போது எந்தவித காலதாமதமும் இன்றி
உடனடியாக சிகிச்சை அளிக்கும் வகையில்
8 படுக்கைகள் கொண்ட காலதாமதம் இல்லாத
நவீன அவசர சிகிச்சை பிரிவு (Zero Delay Causalty Ward), குளிர்சாத
வசதியுடன் செயற்கை சுவாசக் கருவிகள், மல்டி பாரா மானிட்டர்
போன்ற நவீன மருத்துவ உபகரணங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிகிச்சை
சிறப்பு மருத்துவமனையில் திருச்சிராப்பள்ளி
மாவட்டத்தைச் சேர்ந்த திரு அ. பஷீர் (வயது 39) என்பவருக்கு இருதய மாற்று
அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக செய்து முடித்த
டாக்டர் எஸ். மனோகரன் தலைமையிலான
மருத்துவக் குழுவினருக்கு
எனது மனமார்ந்த பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும்
தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பொழுது மேடையிலே நாம் பலபேருக்கு சான்றிதழ்களையும் பதக்கங்களையும்
வழங்கினோம். அவர்களுடைய மகத்தான சேவையை கரவொளி எழுப்பி
அவர்களை பாராட்டி, மேலும் ஊக்குவிக்கின்ற விதத்திலே இருக்கவேண்டுமென
அன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

இன்றைக்கு தமிழக சுகாதாரத்துறை இந்தியாவிலேயே ஒரு முன்மாதிரியாக
இருதய மாற்று அறுவை சிகிச்சையின் மூலமாக நம்முடைய மருத்துவர்களும்,
அவர்களோடு துணை நின்றவர்களும் சாதித்துக்காட்டிய சாதனைக்கு நான்
பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் இந்தத் தருணத்திலே தெரிவித்துக்
கொள்கின்றேன்.

கிராம சுகாதார செவிலியர்கள் அரசுக்கும் கிராம மக்களுக்கும் ஒரு பாலமாக
செயல்படக்கூடியவர்கள். காவல்பணியிலும், கல்வி பணியிலும் இருப்பவர்கள் ஓர்
அர்ப்பணிப்பு உணர்வோடு செயலாற்ற வேண்டும் என்பார்கள், அதையும் தாண்டி
தியாக உணர்வோடும், சகிப்புத் தன்மையோடும்,
அன்புள்ளத்தோடும் செயலாற்றக் கூடியவர்கள்
கிராம சுகாதார செவிலியர்கள் ஆவார்கள்.
செவிலியர் பணி என்பது

**இறைவனால் வழங்கப்பட்ட பணி!** என்பதை இந்த தருணத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். மனம் கோணாது சேவையில் சிறந்து விளங்கும் செவிலியரை தாய்க்கு நிகராக மக்கள் மதித்துப் போற்றுவார்கள்.

ஒரு நாடு முன்னேறியிருக்கிறது என்பதை அந்த நாட்டின் சுகாதாரத்தை மையமாக வைத்துத்தான்
அளவிடமுடியும் என்றால்,
அந்த நாட்டின் முன்னேற்றத்திற்கு
உங்களைப்போன்ற அன்புள்ளம் கொண்ட செவிலியர்களுக்கும் பங்கு இருக்கிறது என்பதை நீங்கள் உணர வேண்டும்.
உங்கள் சேவைதான் இந்த நாட்டிற்கு மிக மிக முக்கியமான தேவையாக கருதப்படுகிறது.
எனவே, இங்கே புதியதாக பணிநியமன ஆணை பெற்றிருக்கும் உங்களை நான் மனமார வாழ்த்துகிறேன்.

இன்றிலிருந்து நீங்கள் புது வாழ்க்கையையும்,
பொது வாழ்க்கையையும் தொடங்குகிறீர்கள்
இனிமேல் மக்களுடைய சுகாதாரம்தான்
உங்கள் சுகாதாரம்.
**‘ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால்,**
**தன் பிள்ளை தானே வளரும்’** என்ற ஒரு கிராமத்து பழமொழியையே மனத்தில் தாரக மந்திரமாக ஏற்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில், ஆசியில் நடைபெறும் இந்த அரசோடு இணைந்து பொதுமக்களுக்கு சேவை செய்யவேண்டுமென்று அன்போடு உங்களை கேட்டுக் கொள்கின்றேன்.

நைட்டிங்கேல் என்று அழைக்கப்பட்ட பிளாரன்ஸ் பிரிட்டனில் செல்வச் செழிப்பு மிக்க ஒரு குடும்பத்தில் பிறந்தவர். பெற்றோரின் எதிர்ப்பையும் மீறி நோயாளிகளைப் பராமரிக்கும் பணியை அவர் மேற்கொண்டார். நைட்டிங்கேல் வறியவர்கள் மீதும், இயலாதவர்கள் மீதும் அக்கறை கொண்டிருந்தார்.
1854 ஆம் ஆண்டு நடைபெற்ற கிரிமியன் போரில் பாதிக்கப்பட்ட இராணுவ வீரர்களுக்கு 30 செவிலியர்களுடன் சென்று சிகிச்சை வழங்கினார். மின் வசதி இல்லாத காலத்தில் இரவு நேரங்களில் விளக்கு ஏந்தி சென்று நோயாளிகளுக்கு சிகிச்சை செய்து வந்தார். அதனால்தான் அந்த ராணுவ வீரர்கள் நைட்டிங்கேல் அவர்களை ‘விண்ணிலிருந்து வந்த தேவதை’ என அழைத்தனர். தனக்குக் கிடைத்த பரிசுப்பொருள்களையும், அன்பளிப்பு நிதியையும் கொண்டு ஒரு நர்சிங் பள்ளியை தொடங்கினார்.
அது தற்போது லண்டனில் நைட்டிங்கேல் செவிலியர் பயிற்சி கூடமாக வளர்ந்துள்ளது. நைட்டிங்கேல் அவர்களின் அரிய செவிலியர் சேவையை பாராட்டி

இங்கிலாந்து ராணி 'order of Merit' என்ற உயரிய பட்டத்தை வழங்கி சிறப்பித்தார்.
விக்டோரியா ராணிக்கு அடுத்தபடியாக
மக்களால் மிகவும் அறியப்பட்ட பெண்மணியாக திகழ்ந்தவர் நைட்டிங்கேல் என்று பிபிசி பாராட்டியது.

இந்த பெருமையெல்லாம் நைட்டிங்கேல் அவர்களுக்கு செவிலியர் பணியால்தான் கிடைத்தது. அப்பணியை அவர் புனிதமாக கருதியதால் இத்தனை சிறப்புகள் ஏற்பட்டது. எனவே, நீங்கள் ஒவ்வொருவரும் நைட்டிங்கேல்களாக சேவையாற்ற வேண்டுமென்று அன்போடு உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மீண்டும் ஒரு முறை உங்களுக்கு எனது பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்வதோடு உங்கள் அனைவருக்கும் எனது புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி ! வணக்கம் !

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**